**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE  DHARMAPURI**

O.S. No.130 of 2018

Deposition of   P.W.1

Name of the Witness:  திருமதி.சுமதி

Date : 20.03.2025

**6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

13)நான 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என் கையெழுத்தை ஆங்கிலத்திலும் போடுவேன், தமிழிலும் போடுவேன். நானும், 1 முதல் 3 பிரதிவாதிகள் சேர்ந்து 4ம் பிரதிவாதி பேரில் வா.சா.ஆ.4 பதிவு செய்யபபட்ட  பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த அசல் பொது அதிகார பத்திரம் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது.  பொது அதிகார சொத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின் சர்வே எண் பாப்பிநாயக்கனஅள்ளி சர்வே எண் 126/1பி2, மற்றும் 126/4 களில் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட 1. 81 1/2 சென்ட்டுக்கு தான் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.  சொத்தை விற்பதற்கும் ஆவணங்கள் எழுதி கொடுத்து பதிவு செய்வதற்கும் தான் பொது அதிகாரம் பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

14) வா.சா.ஆ.5 பொது அதிகார பத்திரம் 3வது பக்கத்தில் சொத்திற்கு நல்ல விலை கிட்டினால் விற்பனை செய்து உடன்படிக்கை செய்து கையெழுத்து இட்டு கொடுக்கவும், குறிப்பிட்ட காலத்திற்குள்

சம்பந்தப்பட்ட சார்பதிவகம் சென்று எங்களுக்காக தாங்களே கிரைய பத்திரம் எழுதி கையொப்பம் செய்து பதிவு செய்யவும், பட்டா படிவத்தில் கையெழுத்து செய்து பதிவு செய்யவும், உரிய தொகையை பெற்று எங்களிடம் சமர்பிக்க வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் அதில் நாங்கள் கேட்கும் போது சரியான கணக்கு வழக்குகளை ஒப்படைக்க வேண்டியது என்று குறிப்பிபட்டுள்ளது என்றால் சரிதான்.

15) நாங்கள் கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் 4ம் பிரதிவாதி தன்னுடைய அண்ணான 5ம் பிரதிவாதிக்கு 19.12.2012 அன்று ரூ4,40,000க்கு விற்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு போடும் போது தான் அதை பற்றி எங்களுக்கு தெரிய வந்தது. 5ம் பிரதிவாதி அந்த கிரையத்திற்கு தொகை எதுவும் கொடுக்கவில்லை. ரவி கிரையத்திற்கு பணம் கொடுக்கவில்லை என்று என்னுடைய வழக்கிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ரவி கிரையத்திற்கான தொகையை கொடுத்த பிறகு தான் அவர் பெயரில் பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. ரவி பணமே கொடுக்கவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. ரவிக்கு பணம் கொடுப்பதற்கு வசதியே இல்லை.

16) 5ம் பிரதிவாதி அவருடைய சகோதரியான 4ம் பிரதிவாதி பெயரில் வா.சா.ஆ.7 தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில்

ரவி தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை சுமதிக்கு எழுதி கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களை ஏமாற்றுவதற்காக அதுபோல் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார்கள். 25.07.2018 அன்று 4ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்று நகலை நான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவில்லை என்றால் சரிதான். முதலில் எங்களுக்கு தெரியவரவில்லை. வழக்கு போட்ட பிறகு தான் தெரியவந்தது. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரம் பற்றி எந்த பரிகாரமும் கேட்க வில்லை என்றால் சரியல்ல. பதிலுரையில் செட்டில்மெணட் பத்திரத்தை பற்றி சொல்லியிருக்கும் போதும் நாங்கள் அந்த ஆவணத்தை குறித்து எந்தவிதமான பரிகாரமும் கேட்காதது என்னுடைய வழக்கை பாதிக்கிறது என்றால் சரியல்ல.

17) 08.07.2019ல் 4ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு 25.07.2018 அன்று எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் சர்வே எண் தவறுதலாக குறிப்பிட்டுள்ளதால் பிழைதிருத்தல் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா 5ம் இன சொத்தை வழக்கு நிலுவையில் இருக்கும் போதே டாக்டர் சற்குணம் என்பவர் 11.7.2019ல் கிரையம் பெற்று அவர் இறந்து விட்டதால் அவருடைய வாரிசுகளான 6 முதல் 8 பிரதிவாதிகளை இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.13 சற்குணம் பேரில் உள்ள கிரைய பத்திரத்தில் 4ம் பிரதிவாதி அவருக்கு

சொத்து எப்படி பாத்தியம் என்று சொல்லியிருக்கிறார் என்றால் அந்த ஆவணத்தில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணம் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

*18)* லதா *24.12.2012*ல் கந்தசாமி, கவியரசு, ஜோதி, எம்.கந்தசாமி, எம்.சேகர், மற்றொரு எம்.கந்தசாமி, மற்றொரு எம்.சேகர், ஆர்.திருமுருகன், கே.கோவிந்தராஜ் ஆகியோர்களுக்கு மனைகள் சம்பந்தமாக கிரையம் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரங்களை பற்றி எனக்கு தெரியும். மேற்சொன்ன கிரைய பத்திரங்கள் குறித்து நாங்கள் இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கேட்கவில்லை, அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த இடங்களை விற்று லதா வேறு சொத்துக்களை வாங்கி வீடு கட்டியுள்ளார். மேற்சொன்ன கிரைய பத்திரங்களை பற்றி பரிகாரம் எதுவும் கேட்காமல் *19.12.2012*ல் 5ம் பிரதிவாதி பேரில் ஏற்பட்ட ஆவணங்கள் குறித்து தான் கேள்வி கேட்கிறேன் என்றால் சரியல்ல.

*19)* 5ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியின் கணவர். 3ம் பிரதிவாதி என்னுடைய உடன் பிறந்த சகோதரி. நான் 3ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதி எல்லோரும் சுமுகமாக இருக்கிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு போடுவதற்கு முன்பாகவே 1ம் பிரதிவாதி மீது வழக்கு போட்டு திரும்ப பெற்று கொண்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தை ரத்து செய்ய நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் எனக்கு அதை

பற்றி தெரியவில்லை. அந்த பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த பத்திரம் செல்லகூடிய பத்திரம் என்பதால் நான் கேட்டுள்ள செல்லாது என்று கேட்டுள்ள பரிகாரம் கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல. மூன்று வருட காலத்திற்குள் நான் வழக்கு தாக்கல் செய்யாததால் நான் கேட்டுள்ள பரிகாரம் செல்லகூடியதல்ல என்றால் சரியல்ல.

20) 4ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் பேரில் 2018ல் தானபத்திரம் குறித்து எவ்விதமான பரிகாரமும் கோரவில்லை என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி பேரில் உள்ள கிரைய பத்திரம் பற்றி எந்த கேள்வியும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வில்லங்க சான்றிதழில் லதா 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த ஆவணம் பற்றி குறிப்பிடவில்லை என்றும் அதை தெரிந்தே நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 5ம் இன சொத்தை குறித்து எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்க கூடியதல்ல என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதியின் தூண்டுதல் பேரில் தான் இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.